DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW4 |
| | { Prosecution |
| | { |
| Name | : கலைமதி |
| Father's Name | : ராபின்சன் |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2024.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.4 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் சிக்கம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தற்போது ஓமலூர் வட்டார வளமையத்தில் சிறப்பு ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா, அ.சா.3 என் அம்மா, அ.சா.2 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என் தாத்தா பெயர் சடையன், என் பாட்டி பெயர் பழனியம்மாள். அவர்களுக்கு முருகேசன், சின்னுசாமி ஆகியோர்கள் மகன்கள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. என் தாத்தா சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். அது போக நீர் ஊற்று சோதிக்கும் வேலையும் செய்து வந்தார். அந்த சமயத்தில் 1981 ல் மூலப்பாதையில் 4.58 செண்ட் நிலம் கிரையம் வாங்கினார். என் அப்பா பால் சேகரிப்பு வேலையும் என் சித்தப்பா லாரி ஓட்டுநராகவும் வேலை செய்து வந்தார்கள். 1999 ல் என் சித்தப்பா ஒரு சாலை விபத்தில் இறந்துவிட்டார்.

அதன் பிறகு சித்தப்பா மனைவி பேபி, என் பாட்டி பழனியம்மாள் தங்களுக்கு சொத்தை பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் என் தாத்தா குழந்தைகள் பெரியதான பிறகு சொத்தை பிரித்து கொடுப்பதாக சொல்லிவிட்டு 2000 ஆண்டிலும், 2006 ஆண்டிலும் அந்த சொத்துக்களை என் அப்பா பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார். அதனால் பேபி, பழனியம்மாள் ஆகியோர் 1ம் எதிரியுடன் சேர்ந்து கொண்டு 2007ம் ஆண்டில் என் தாத்தாவை அழைத்து சென்று அவர் 2, 3 எதிரிகளுக்கு கிரையம் கொடுத்தது போல பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள். அதன் பிறகு ஒரு நாள் தேதி மாதம் நினைவு இல்லை அன்று எங்களுடைய மீதி நிலத்தையும் எழுதி கொடுக்க வேண்டும் என்று எதிரிகள் எங்களை வீட்டில் இருந்து கட்டாயப்படுத்தி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று பத்திரம் எழுதி வாங்கி கொண்டார்கள். கல்லூரியில் படித்து கொண்டிருந்த என் தம்பியையும் மிரட்டி அழைத்து கொண்டு வந்து எதிரிகள் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். எழுதி வாங்கிய மறுநாள் 1ம் எதிரியும் அவருடன் கணபதி, தமிழ்செல்வன், பச்சமுத்து, வைத்தி, பழனியம்மாள், பேபி மற்றும் அடையாளம் தெரிந்த நபர்களும் எங்கள் நிலத்திற்கு வந்து எங்களை வெளியேற்றிவிட்டு JCB, டிராக்டர் மூலம் எங்களுடைய தார்சு வீடு, ஓட்டு வீடு, அட்டை வீடு, மாட்டு கொட்டகை, தண்ணீர் தொட்டி, மின் மோட்டார் ஆகியவற்றை இடித்து நிரவியும், 30 தென்னை மரங்களை வெட்டி கீழே தள்ளியும் நிலத்தை நிரவி விட்டார்கள். அதன் பிறகு நாங்கள் குள்ள மூப்பன்காட்டில் உள்ள எங்கள் பாட்டி வீட்டிற்கு சென்று குடியிருந்தோம். அதன் பிறகு சுமார் 10 நாட்களுக்குள் 1ம் எதிரியுடன், வைத்தி, பச்சமுத்து ஆகியோரும் அங்கு வந்து எங்களை மிரட்டி பவர் பத்திரம் எழுதி தர வேண்டும் என்று கேட்டார்கள். அதே போல் மறுநாள் காலை எங்களை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 1ம் எதிரியும் வைத்தி, பச்சமுத்து ஆகியோர் எங்களை அழைத்து சென்று அவர்கள் பெயரில் பவர் பத்திரம் எழுதி வாங்கி கொண்டார்கள். அதன் பிறகு இந்த சம்பவம் தொடர்பாக நில அபகரிப்பு பிரிவில் என் அப்பா புகார் கொடுத்தார். அந்த புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-கலைமதி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.